**29.09.2023 ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள்**

**பொருள் எண்.1**

மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நாகர்கோவில் அவர்களின் செ.மு.ஆ.எண்.ஆ3/2370/2023 நாள் 11.08.2023 -ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன் கீழ் 19-வது வார்டு மாதா காலனி பகுதியில் பழுதடைந்த அங்கன்வாடியை அகற்றி புதிய அங்கன்வாடி கட்டிடம் அமைத்தல் பணிக்கு ரூ.14.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 24.08.2023 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 08.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி உறை திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.25 % அதிகம் |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1343-1/2022/இ1

**தீர்மானம் எண்.638 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் கட்டுமான பணி நடைபெற்று வருவதால் மார்க்கெட் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான குழாய் 180 mm PVC pipe line மாற்றி அமைப்பதற்கு ரூ.200000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.566 நாள் 30.06.2023 படி மன்ற ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Vargheesh Construction, Asaripallam | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| 2. | Seventh cartel Firm Tirunelveli | மதிப்பீட்டை விட 0.98 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **M/s.Vargheesh Construction,** நிறுவனத்திற்கு அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.647/2023/இ2

**தீர்மானம் எண்.639 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளையில் உள்ள Bore No.20-க்கான Pump room அறையை இடித்து விட்டு புதிய அறை கட்டுவதற்கும் ரூ.65000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.592 நாள் 31.07.2023-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு. எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.80 % அதிகம் |
| 2. | திரு.எஸ்.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.20 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.20 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.847/2023/இ2

**தீர்மானம் எண்.640 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர், மலிக்கா கிணறு அருகிலிருந்து குழந்தையேசு காலனி செல்லும் வழியில் உள்ள 3”PVC பகிர்மான குழாய் மிகவும் பழமை வாய்ந்ததாக உள்ளதால் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு துர்நாற்றம் வீசுவதால்

பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் சீராக வழங்குவதற்கு புதியதாக 3”PVC pipe line அமைத்தல் பணிக்கு ரூ.765000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.567 நாள் 30.06.2023-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எ.விஷ்ணு ராம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.95 % அதிகம் |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.648/2023/இ1

**தீர்மானம் எண்.641 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய மோட்டார்கள், வால்வுகள் மற்றும் பேனல் போர்டு வாங்குவதற்கு ரூ.790000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.572 நாள் 30.06.2023-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.00 % அதிகம் |
| 2. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.697/2023/இ2

**தீர்மானம் எண்.642 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளையிலிருந்து குழந்தை யேசு காலனி வரை 63mm HDPE pipeline அமைக்கும் பணியினை ரூ.400000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.564 நாள் 30.06.2023-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 28.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.டி.எபின்சாம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.00 % அதிகம் |
| 2. | திரு.ஆர்.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.30 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.30 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.666/2023/இ2

**தீர்மானம் எண்.643 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

15-வது நிதிக்குழு மானியம் 2023-24 -ன் கீழ், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு, பணி மேற்கொள்ளும் இடத்தில் மண் பரிசோதனை செய்வதற்கான தொகை ரூ.23600/- அனுப்ப கேட்டு அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி Invoice No.102 நாள் 01.09.2023 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.23600/- வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்.684/2023/இ1

**தீர்மானம் எண்.644 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட ஏ.வி.எம் கால்வாயில் தூர்வாரி சுத்தம் செய்தல், புல் புதர்களை அகற்றுதல், பாலங்கள் மற்றும் பக்கசுவர் கட்டுதல் பணியினை ரூ.580.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு, பணி மேற்கொள்ளும் இடத்தில் மண் பரிசோதனை செய்வதற்கான தொகை ரூ.23600/- அனுப்ப கேட்டு, அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி Invoice No.101 நாள் 01.09.2023 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.23600/- வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்159-1/2023/இ1

**தீர்மானம் எண்.645 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், புதிய நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல் பணியினை ரூ.157.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு, பணி மேற்கொள்ளும் இடத்தில் மண் பரிசோதனை செய்வதற்கான தொகை ரூ.23600/- அனுப்ப கேட்டு, அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி Invoice No.103 நாள் 01.09.2023 பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.23600/- வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்.377/2023/இ1

**தீர்மானம் எண்.646 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான கே.எஸ்.எஸ்.எஸ் காலனியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டவும், உப்பளம் உரக்கிடங்கில் மின்தகன மேடை அமைக்கவும், ஏ.வி.எம்.கால்வாயில் பாலம் மற்றும் தடுப்பு சுவர் அமைக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மண் பரிசோதனை செய்து அதற்கான சான்றுடன் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படி, திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி அவர்களால் 27.08.2023 அன்று மண் பரிசோதனை செய்யப்பட்டது. மேற்படி மூன்று இடங்களையும் மண் பரிசோதனை செய்த வகையில் Equipments transport, Labour transport & Skilled labour charges ஆகியவற்றிற்கான செலவு ரூ.45,000/- உதவி பொறியாளரால் வழங்கப்பட்டது. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.377/2023/இ1

**தீர்மானம் எண்.647 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளியாகுளம் புல் புதர்கள் வளர்ந்து கழிவுகள் கொட்டப்பட்டும், பாசிகள் படர்ந்து Shutter கள் செயல்படாமல் இருப்பதால் தண்ணீர் வெளியேற்றி சுத்தம் செய்ய முடியாமல் துர்நாற்றம் வீசி வருவதால் AMRUT 2.0 திட்டத்தின் கீழ் மேற்படி குளத்தினை சுத்தம் செய்து Fencing அமைத்து பராமரிப்பு பணி செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் திட்ட மதிப்பீடு தயார் செய்ய உத்தரவிடப்பட்டது எனவே விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு திட்ட ஆலோசகர் ஒருவரை நியமனம் செய்வதற்கு அனுமதியும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.159-1/2023/இ1

**தீர்மானம் எண்.648 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் இடிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் பணிகள் நடைபெற்று வருவதால் பழைய பேருந்து நிலைய கடைகளுக்கான முன்வைப்புத் தொகை நகர்மன்ற தீர்மானம் எண்.437 நாள் 30.03.2023- ன் படி கடைகாரர்களுக்கு திரும்ப வழங்கப்பட்டது.

பழைய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் 01.12.2022 முதல் 30.11.2023 வரைக்கும் விளம்பரம் செய்ய திரு.R.ரமேஷ் என்பவர் குத்தகை தொகையாக ரூ.55160/- நாள் 23.12.2022-ன் படி நகராட்சி அலுவலத்தில் செலுத்தியுள்ளார். எனவே தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்த மாதத்திற்குரிய தொகை போக மீதமுள்ள மாதத்திற்கான தொகையினை அன்னாருக்கு வழங்கவும், மேலும் மேற்படி உரிமத்தை ரத்து கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.236/2017/அ1

**தீர்மானம் எண்.649 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டமானது 25.08.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மேற்படி மாணவர்களுக்கு உணவு அருந்துவதற்கு அவசர அவசியம் கருதி தேவையான சிர்வர் தட்ட மற்றும் தண்ணீர் அருந்துவதற்கான டம்ளர் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான செலவு தொகை ரூ.66,690/-க்கு பேபி மெட்டல்ஸ் நிறுவனத்தில் பட்டில் வரப்பெற்றுள்ளது.

எனவே ரூ.66,690/- மேற்படி நிறுவனத்திற்கு காசோலையாக வழங்கவும் செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.317-1/2023/இ1

**தீர்மானம் எண்.650 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு தேவையான இட்லி டோக்கன், தயிர் சாதம், சாம்பார் சாதம் போன்றவற்றிற்கு கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு அச்சகம் மூலம் டோக்கன்கள் அச்சிட்டு பெறப்பட்டதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.548 நாள் 30.06.2023-ல் அனுமதி பெறப்பட்டது.

தற்பொழுது கூடுதலாக செலவு தொகை ரூ.96,480/- மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி மேற்படி தொகை கூட்டுறவு அச்சகத்திற்கு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.03/2022/அ1

**தீர்மானம் எண்.651 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சி வரி வசூல் மையத்தில் MSP 250 Star பிரிண்டர் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதிய பிரிண்டர் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.16000/- பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1062/2023/இ1

**தீர்மானம் எண்.652 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட உப்பளம் உரக்கிடங்கில் (MCC Centre) உரம் தயாரிக்க கூடிய Pulverizer Machine and conveyor belt பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்வதற்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | Thiru.Suresh, Marthandam | Rs.15300/- |
| 2. | LK Electrcals service, Karungal | Rs.15700/- |
| 3. | SRI Rajarajeswari Electricals | Rs.15600/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சுரேஷ் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தொகையினை ரூ.15300/- நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1063/2023/இ1

**தீர்மானம் எண்.653 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்குட்பட்ட 1-வது வார்டில் 3 முறை நகர்மன்ற தலைவராக சிறப்பாக பணியாற்றிய திரு.ஜேசையா அவர்கள் வீட்டு அருகில் உள்ள சாலைக்கு ஜேசையா சாலை என பெயர் பலகை வைப்பதற்கு, அரசுக்கு அனுப்பி அனுமதி பெற்ற பின் நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் அங்கன்வாடி மையத்தினை வரும் திட்ட நிதியில் சேர்த்து, திட்ட நிதி வரப்பெற்ற உடன் வேலை செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1054/2023/இ1

**தீர்மானம் எண்.654 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொடர்பான விபரங்கள் பதிவு 2022-23 ஆம் ஆண்டிற்கு Online-ல் பதிவு செய்த வகையில் ரூ.10,000/- Jacob & Jacob நிறுவனம், மார்த்தாண்டம் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1219/2015/பி1

**தீர்மானம் எண்.655 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.19**

இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி பணியிடை காலத்தில் மரணமடைந்த திரு.பி.கணபதி அன்னாரது மனைவி திருமதி.வே.சாந்தா அவர்களுக்கு அன்னாருக்கான சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதி தொகைக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ.10000/- பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் மேற்படி தொகையினை பணியாளரது வாரிசுக்கு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1396/2022/பி1

**தீர்மானம் எண்.656 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு-4 கதவு எண்.2-98/2,3,4,5 கட்டிடங்களுக்கு சொத்துவரி மேல்முறையீட்டு குழுவால் குறைக்கப்பட்ட சொத்துவரியினை நடைமுறைப்படுத்தபட்டதை எதிர்த்து Dr.பிரேம் குமார் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு WP(MD)NO.517/2022, 7457/2023, 7517/2023,7518/2023,7519/2023 ஆகிய வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.A.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞருக்கு வழக்கு ஒன்றிற்கு ரூ.10000/- வீதம் ஐந்து வழக்குகளுக்கு ரூ.50000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.389/2022/அ1

**தீர்மானம் எண்.657 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.சி3/1144173/2023 நாள் 12.09.2023-ன் படி, குளச்சல் மற்றும் சுற்று வட்டார பகுதிகிளில் உள்ள விநாயகர் சிலைகளை 24.09.2023 அன்று வெட்டுமடை அருகே கடலில் கரைப்பதற்கு மண்ணால் நடைபாதை அமைப்பதற்கும், சவுக்கு கம்பால் பக்கசுவர் மற்றும் விளக்கு வசதிகள், ஜெனரேட்டர் வசதிகள், வாடகை அடிப்படையில் அமைப்பதற்கும் சிலைகளை கரைத்த பின் மண்ணை அப்புறப்படுத்துவதற்கும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.50000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1002/2022/இ1

**தீர்மானம் எண்.658 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் ந.க.எண்.சி3/1144173/2023 நாள் 12.09.2023-ன் படி, குளச்சல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள வினாயகர் சிலைகளை வினாயகர் சதுர்த்தியை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளி 19.09.2023 அன்று கோரப்பட்டு, கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | ரூ.49,500/- |
| 2 | திரு.A.பிரான்சீஸ் ஒப்பந்ததாரர் | ரூ.52,500/- |
| 3 | திரு.C.சுரேஷ் ஒப்பந்ததாரர் | ரூ.51,000/- |

மேற்படி வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.இரவீந்திரன் மூலம் பணி மேற்கொள்ளும் பொருட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி, பணி செய்து முடிக்கப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.49,500/-ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1002/2022/இ1

**தீர்மானம் எண்.659 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை முதல் தளம் கடை எண்.7-ஐ (வரிவிதிப்பு எண்.148/BDO/1/00026) செல்வி.ஆஷிகா என்பவர் மாத வாடகைக்கு எடுத்திருந்தார். தற்போது கடையினை நடத்த இயலாத காரணத்தினால் நகராட்சி வசம் 30.08.2023-ல் ஒப்படைத்துள்ளார்.

மேற்படி கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.72,000/- மொத்தம் சேர்த்து ரூ.1,72,000/- செலுத்தியுள்ளார். எனவே 9/2023 மாதம் வரை உள்ள கடை வாடகை முழுவதும் ஈடு செய்யவும், மேற்படி கடையினை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.660 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526 -ல் கீழ்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,

1. Full Body Tinkering work
2. Full painting work

மேற்காணும் பழுதுகளை சரிசெய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண்.661 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.25**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு 9-ல் களிமார் பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.16-287/5 வரிவிதிப்பு எண்.148/016/00564 கன்னியாகுமரி மாவட்ட கட்டுமான தொழிலாளர் சங்கம், வணிக பயன்பாடு கட்டிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை வரி அரையாண்டுக்கு ரூ.1800/- ஆக உள்ளது. மேற்படி கடைக்கு திடக்கழிவு மேலாண்மை வரி கூடுதலாக உள்ளதால் அரையாண்டு வரி ரூ.600/- ஆக நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.422/2020/எச்1

**தீர்மானம் எண்.662 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**31.10.2023 ஆம் தேதிய சாதாரணக் கூட்டப் பொருட்கள்**

**பொருள் எண்.1**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-24-ன் கீழ், நவீன தகன மேடை அமைத்தல் பணியினை ரூ.157.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு Structural Design-க்கான தொகை ரூ.23600/- அனுப்ப கேட்டு, அரசு பொறியியல் கல்லூர திருநெல்வேலி Invoice 249 நாள் 17.10.2023 அன்று பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.377/2023/இ1

**தீர்மானம் எண்.663 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

15-வது நிதிக்குழு மானியம் (Health Grant) 2023-24 -ன் கீழ், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ் காலனி பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படும் இடத்தில் Structural Design -க்கான தொகை ரூ.24780/- அனுப்ப கேட்டு அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி Invoice No.248 நாள் 22.09.2023 அன்று பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு பொது நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்..

ந.க.எண்.684/2023/இ1

**தீர்மானம் எண்.664 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சியில் ஈப்பு வாகனம் TN 75 AW 5692-க்கு வீல் பேலன்சிங் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதற்கு திரு.சு.சுந்தர் ராஜ் ஓட்டுநர் அவர்களால் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.750/- அன்னாருக்கு வழங்கவும் மற்றும் வாகனம் 30000 கி.மீ ஓட்டப்பட்டுள்ளதற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சீட் கவர்கள் புதிதாக மாற்றுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் ஈப்பு வாகனம் சோதனை செய்யப்பட்டதில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி வழங்கப்பட்டுள்து. அதன் விபரம் பின்வருமாறு,

1. ASBESTOS WASHER மாற்றுதல்
2. Maximile Elite 1 litre மாற்றுதல்
3. Oil Fileter மாற்றுதல்
4. Maximile ultra மாற்றுதல்
5. Filter Element மாற்றுதல்
6. Element Air cleaner மாற்றுதல்
7. Consumable spare part மாற்றுதல்
8. Seat cover மாற்றுதல்
9. Battery water மாற்றுதல்
10. Protective cover kit மாற்றுதல்
11. Maxi clean with filling 16 litre மாற்றுதல்

எனவே மேற்படி பணிகளை மகேந்திரா நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு உத்தேச செலவு தொகை ரூ.19500/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்..

ந.க.எண்.370/2023/இ1

**தீர்மானம் எண்.665 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530 -க்கு திடீரென வாகனத்தில் உள்ள பெல்ட்கள், டைனமோ பெல்ட், வாட்டர் பம்ப் பெல்ட், பவர் ஸ்பீரிங் பெல்ட் மற்றும் வலது பின்புற வீல் பேரீஸ் பழுதுகள் ஏற்பட்டுள்ளதை சரி செய்தல் பணிகளை மேற்கொண்ட வகையில் அதற்கான செலவினம் ரூ.1950/- திரு.வ.ராஜகுமார், ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1950/- திரு.வ.ராஜகுமார் ஓட்டுநருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.666 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தூய்மை பணியாளர் திரு.பீட்டர் அருள் செல்வன் என்பவர் தன்னை பணிவரன்முறை செய்ய கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு பதிவு செய்துள்ளார். மேற்படி பணியாளர் பணி வரன்முறை செய்ய கோரி தொடரப்பட்ட வழக்கு எண்.16184/2017 சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதிமன்றத்தில் 11.08.2023 அன்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. வழக்கறிஞர் திரு.பி.ஆதிமூல பாண்டியன் அவர்களுக்கு கட்டணம் ரூ.20,000/- கேட்டு வரப்பெற்றுள்ளது. எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.667 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை முதல் நரிக்கல் வரை குடிநீரின் pressure குறைவாக உள்ளதால் 2” PVC பகிர்மான குழாயை மாற்றி 3” PVC பகிர்மான குழாய் அமைப்பதற்கு ரூ.3,35,000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதிய்ன் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.587 நாள் 31.07.2023 -ன் படி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | திரு.ற்றி.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.24 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.845/2023/இ2

**தீர்மானம் எண்.668 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து செல்லும் பகிர்மான குழாய் பர்னட்டிவிளை ஜெய அறையிலிருந்து சீம்பிளிவிளை வரை பகிர்மான குழாய் பைப் லைன் உடைவுகள் சரி செய்வதற்கு ரூ.515000/-? மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.563 நாள் 30.06.2023 -ன் படி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.36% குறைவு |
| 2. | திரு.ற்றி.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.14 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.36 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.667/2023/இ1

**தீர்மானம் எண்.669 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட 10 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்படும் குடிநீரில் கலப்பதற்கு பிளீச்சிங் பவுடர் ரூ.250000/- மதிப்பீட்டில் வாங்குவதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.453 நாள் 28.04.2023 -ன் படி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணிக்கு 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Stevenwin Associates | மதிப்பீட்டு விகிதம் 0.00 |
| 2. | M/s.Amritha Associates | மதிப்பீட்டை விட 3.77 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Amritha Associates நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 3.77 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 20.10.2023 பணி உத்தரவு வழங்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.411/2023/இ2

**தீர்மானம் எண்.670 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சியிலிருந்து குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்பட்ட 16 குடிநீர் இணைப்புகள் கணணியில் முறையாக நீக்கம் செய்யப்படாமல் உள்ளதால் தொடர்ந்து கேட்பு தொகை பதிவேற்றம் செய்யப்பட்டதை நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | இணைப்பு எண். | பெயர் (திரு/திருமதி) | நிலுவை வருடம் | நீக்கம் செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | 148/002/900123 | P.ரெத்தினராஜ் | 2018-19 முதல் 2023-24 வரை | 5199 |
| 2 | 148/004/900109 | M.A.ஷாகுல் அமீது | 2022-23 முதல் 2023-24 வரை | 1932 |
| 3 | 148/010/900070 | A.ஷாகுல் அமீது | 2022-23 முதல் 2023-24 வரை | 1932 |
| 4 | 148/011/900032 | றாபியத் | 2022-23 முதல் 2023-24 வரை | 2862 |
| 5 | 148/011/900067 | றகுமத் நிஷா | 2022-23 முதல் 2023-24 வரை | 2862 |
| 6 | 148/018/900036 | முகம்மது சாலி | 2022-23 முதல் 2023-24 வரை | 2862 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 148/018/900114 | B.சையத் அலி | 2022-23 முதல் 2023-24 வரை | 3351 |
| 8 | 148/018/900143 | ஓரியண்ட் ஆங்கிலப்பள்ளி | 2022-23 முதல் 2023-24 வரை | 3432 |
| 9 | 148/018/900187 | முகம்மது மீரா உம்மாள் | 2021-22 முதல் 2023-24 வரை | 3327 |
| 10 | 148/024/900180 | முகம்மது செரீப் | 2022-23 முதல் 2023-24 வரை | 2397 |
| 11 | 148/024/900181 | விக்டோரியாள் | 2022-23 முதல் 2023-24 வரை | 2862 |
| 12 | 148/024/900182 | S.மேரி ராஜன் | 2018-19 முதல் 2023-24 வரை | 5667 |
| 13 | 148/024/900183 | S.மேரி ராஜன் | 2021-22 முதல் 2023-24 வரை | 3795 |
| 14 | 148/024/900184 | S.மேரி ராஜன் | 2021-22 முதல் 2023-24 வரை | 3795 |
| 15 | 148/024/900185 | S.மேரி ராஜன் | 2018-19 முதல் 2023-24 வரை | 5667 |
| 16 | 148/024/900186 | S.மேரி ராஜன் | 2021-22 முதல் 2023-24 வரை | 3535 |

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.671 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாக ஏலம் போகாத கடைகளுக்கு 12.10.2023 ஏலம் கோரப்பட்டது. கவியரசு கண்ணதாசன் வணிக வளாக தரை தள கடை எண்.3-க்கு மாத வாடகை ரூ.35000/-க்கு உரிமம் எடுத்து கொள்ள திரு.S.அப்துல் அஸிஸ் என்பவர் கோரியுள்ளார். இக்கடையானது சுமார் ஓராண்டு காலமாக ஏலம் போகாமல் உள்ளதால் தொடர்ந்து ஏற்படும் நிதியிழப்பினை தவிர்க்கும் வகையில் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதியின் பேரில் உரிமம் ஒப்படைக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.01/2020/அ3.

**தீர்மானம் எண்.672 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சி வார்டு எண்.22, துறைமுகம் சாலையில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து வீடுகளுக்குள் தண்ணீர் சென்று சுகாதாரக் கேடு விளைவிப்பதாலும் சாஸ்தான்கரை பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதுபட்டு காணப்படுவதாலும், மேற்காணும் இரண்டு பகுதிகளிலும் மழைநீர் வடிகால் பழுது பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,70,000/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1189/2023/இ1.

**தீர்மானம் எண்.673 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பகுதியில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ள நீரை அகற்ற இடையூறாக உள்ள அடைப்புகளை JCB இயந்திரம் மூலம் அகற்றி சீர் செய்த வகையிலும் மற்றும் ஏ.வி.எம் சானலில் உள்ள அடைப்புகளிலிருந்து அகற்றப்பட்ட சேறு மற்றும் சகதிகளை வாகனத்தில் ஏற்றி அப்புறப்படுத்தப்பட்ட வகையில் JCB, கிட்டாஜ் மற்றும் டிம்போ பயன்படுத்திய வகையில் ரூ.28,700/- செலவு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி செலவு தொகையினை ரமேஷ் குமார் எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. அவசரம் கருதி பணிகள் மேற்கொண்ட வகையில் பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.674 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பகுதியில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பொது மக்களை தற்காலிகமாக அமைக்கப்பட்ட முகாமில் தங்க வைத்து உணவு மற்றும் போர்வை, தலையணை, பாய் வாங்கி வழங்கிய வகையில் ரூ.13,770/- செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.675 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

**நகர்மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் S.ரமேஷ், M.A.ரஹீம், P.பனிக்குருசு, S.சுரேஷ் குமார்,A.ஜாண் பிரிட்டோ, C.வினேஷ், F.லாரன்ஸ், C.ஜாண்சன், S.ஷெர்லி பிளாரன்ஸ், T.தனலெட்சுமி, S.ஷீனத் பாத்திமா, S.குறைஷா பீவி, K.செல்வகுமாரி, P.சந்திர வயோலா, G.திலகா, S.மேரி, S.ஷீலா ஜெயந்தி, S.சஜீலா, S.A.சுஜித்ரா கொண்டு வரும் தீர்மானம்.**

குளச்சல் நகராட்சியில் வீடுகளிலிருந்து கழிவு நீர் வெளியேறும் குழாய்களை அடைத்து கழிவு நீர் வெளியேறுவதை தடுக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பொது மக்களிடையே பதட்டமும், அச்ச உணர்வும் ஏற்பட்டுள்ளது.

நகர்மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாகும். நகராட்சி அதிகாரிகளின் செயலானது நகர்மன்ற உறுப்பினர்களாகிய எங்களிடம் எந்த விதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல், வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு சென்று கழிவு நீர் குழாய்களை அடைக்க கட்டாய படுத்தியும் குழாய்களை உடைத்து சிமெண்ட் காங்கிரீட்டால் அடைத்தும் பொது மக்களை பயமுறுத்தியும், மிரட்டியும் வருகிறார்கள். இதனால் பொது மக்களிடையே மக்கள் பிரதிநிதியான எங்களுக்கு கெட்ட பெயரும், பல்வேறு நெருக்கடிகளுக்கும் ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் புதிதாக கட்டக்கூடிய கட்டிடங்களுக்கு உறிஞ்சு குழாய் அமைத்திட கட்டாயப்படுத்துவதில் தவறில்லை.

மேலும் எங்களது வார்டு மக்களுக்கு தேவையில்லாத நெருக்கடி கொடுத்தால் பொது மக்களை திரட்டி அவர்களின் உரிமைக்காக போராடுவோம். எனவே கழிவு நீர் குழாய்களை அடைக்க கோரும் நடவடிக்கையினை தவிர்த்திட நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக் கொள்கிறோம்.

**தீர்மானம் எண்.676 ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி